[1972 மார்ச் 28

Residence for Chairmen of local bodies

*** 746 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for** Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are proposals under the local bodies to have official residence for their Chairmen; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : **(அ) & (இ)** நிலையான மேயர் இல்லம் கட்டுவது பற்றிய கருத்துருவில் ஒரு முடிவு காணும்வரை, சென்னை நகர மேயர் வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அதிகாரபூர்வமான தனியார் மாளிகையில் வசிக்கிறார்கள். வேறு உள்ளாட்சி மன்றங்களின் தலைவர் இல்லம் கட்டுவதற்குரிய செயற்குறிப்பு யாதொன்றும் அரசிடம் இல்லை.

THIRU N. DENNIS : For the effective transaction of work such housing scheme would be helpful. So, may I know from the Hon. Minister whether Government will take steps to implement such housing schemes to the Chairmen of Municipal Councils and **Panchayat Union Councils?**

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பல இடங்களிலே நிதிப்பற்றாக்குறை இருக்கிறது. ஆகவே, நிதி வசதி அதிகமாக இருந்து, இதற்கு வழிவகை செய்ய முடியுமென்ற செயற்குறிப்பு அந்தந்த நகராட்சிமன்றத்தின் மூலம் வந்தால் அரசாங்கம் பரிசீலிக்கலாம். சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் மேயருக்கு என்று தனி இல்லம் அவசியம் என்று கருதி இந்த ஆண்டு வாடகைக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாநகராட்சி மன்றமே நிலையான ஒரு கட்டிடம் வேண்டுமென்ற செயற்குறிப்பைப் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறார்கள்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, முன்பு நகர்மன்றத் தலைவர்களாக பெரிய பணக்காரர்கள் வந்துகொண்டிருந்தார்கள். இப்பொழுது மிகவும் சாமான்யமானவர்கள், ஏழைகள் வருகிறார்கள். இவர்கள் இருக்கும் வீடுகள் மிகச்சிறிய வீடுகள், பார்க்க வருபவர்களை இவர்கள் பார்ப்பதற்கே கூச்சப்படும் நிலையில் இருக்கிறது. ஆகவே நகர்மன்றத் தலைவர்கள் வீட்டுக்குச் சென்றால் அலுவலகத்தில் பார்க்கும்படி கூறிவிடுகிறார்கள். ஆகவே, இந்த ஏழைகள் நகர்மன்றத் தலைவர்களாக வந்துவிட்ட காரணத்தால்

1972 மார்ச் 28]

நல்ல வீடுகளிலே இருக்க வேண்டுமென்பதற்காக இந்த அரசு பாதி மானியத் தொகையும், பாதி நகராட்சிமன்றமும் ஏற்று இந்த வீடுகளைக் கட்ட முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பல ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்களுக்கே இன்னும் சொந்தக் கட்டிடங்கள் அமையவில்லை. அவைகளுக்கு முதலில் கட்டடம் அமைந்து, முக்கியமாக மாறுதலுக்கு ஆளாகும் அதிகாரிகள், அலுவலர்களுக்குக் கட்டடம் வேண்டும். இவைகளெல்லாம் நிறைவேறிய பிறகு—நிரந்தரமாகக் குடியிருக்கும் ஏழைகளாக இருந்தாலும் ஏதாவதொரு வீட்டில் குடியிருக்கத் தான் செய்வார்கள்—நகராட்சி மன்றங்களின் நிதிநிலை இடம் தந்தால் அதுபற்றிப் பரிசீலனை செய்யலாம்.

வாலாஜாபேட்டை நகரசபைத் தலைவர்

***747 வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜாபேட்டை நகரசபைத் தலைவர் பேரில் 6—1—1972 அன்று நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், கூறப்பட்டுள்ள காரணங்கள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 6—1—1972 அன்று வாலாஜாபேட்டை நகரசபையின் கூட்டம் நடைபெறவில்லை.

(இ) நம்பிக்கையில்லை என்ற காரணம் மட்டும்தான் கூறப்பட்டது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, அதற்கு பிறகு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்பொழுது புதிய தலைவர் தேர்தலை உடனடியாக நடத்த அரசு ஆவன செய்யுமா ?